நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை குற்றத் தடுப்புத் தொடர்கள்

# உங்கள் அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும்

# அஞ்சல் திருட்டு

நவீன வாழ்க்கை என்பது வாடிக்கையாளர்களுக்கு எளிதாக அணுகவும் மற்றும் வசதியாகவும் உள்ளது. இதில் நாம் எவ்வாறு பொருட்களையும், தகவல்களையும் அனுப்புகிறோம் மற்றும் பெறுகிறோம் என்பதும் உள்ளடங்கியது.

கடன் அட்டைகள், ஓட்டுநர் உரிமம், அஞ்சலில் அனுப்படும் பயன்பாட்டு அறிக்கைகள் போன்றவற்றில் உங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தின் முக்கிய சொந்தத் தகவல்கள் அடங்கியுள்ளன.

இந்த தகவல்களில் சில, தவறான சிலரின் கரங்களுக்குச் சென்று, போலி அடையாளங்களை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டு, குற்றச் செயல்களுக்கு உபயோகப்படுத்தப்படக்கூடும். இந்த வகையான குற்றம் ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான டாலர்களை வீணாக்குகிறது. அத்துடன் உங்கள் நிதிநிலை நற்பெயருக்கு மோசமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடும்.

இத்தகைய எளிய உதவிக் குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம் **நாம் அனைவரும்** இந்த வகையான குற்றத்திலிருந்து நம்மை நன்றாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

## உங்கள் அஞ்சலைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும்

- **எப்போதும்** பூட்டி வைக்கக்கூடிய அஞ்சல் பெட்டியை நிறுவவும்.
- **எப்போதும்** உங்கள் அஞ்சல் பெட்டிக்காகத் தரமான பூட்டைப் பயன்படுத்தவும்.
- உங்கள் அஞ்சல் பெட்டி **ஒருபோதும்** நிரம்பியிருக்க அல்லது பொங்கி வழிய அனுமதிக்க வேண்டாம்.

## உங்கள் அஞ்சலைப் பாதுகாத்துக் கொள்ளவும்

- **எப்போதும்** புதிய கடன்அட்டைகளை வங்கியில் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் போய்ப் பெற்றுக்கொள்ளுமாறு ஏற்பாடு செய்யவும்.
- **எப்போதும்** நீண்ட காலத்துக்கு நீங்கள் வெளியே செல்லவேண்டியிருந்தால், அஞ்சல்களைத் தபால் நிலையத்தில் நிறுத்தி வைக்கவோ அல்லது நண்பர் ஒருவர் மூலம் பெற்றுக்கொள்ளவோ ஏற்பாடு செய்யவும்.
- **எப்போதும்** உங்கள் அஞ்சல் தினந்தோறும் எடுக்கப்பட வேண்டும்.

## உங்கள் அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும்

- **எப்போதும்** 'அறிமுகமில்லா அழைப்பு'குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். அத்துடன் யாருடன் பேசுகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- உங்களுக்கு அறிமுகமில்லாத அல்லது நம்பிக்கையில்லாத நபர்களிடம் உங்கள் தனிப்பட்ட விவரங்கள் எதுவும் **ஒருபோதும்** கொடுக்க வேண்டாம்.
- **எப்போதும்** ஒரு மோசடிக்காரன் உங்களைத் தொடர்பு கொண்டிருப்பதாக நீங்கள் நினைத்தால் உங்கள் வங்கி, நிதி நிறுவனம் அல்லது சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் அஞ்சல் திருடப்பட்டு, மோசடியான அடையாளத்தைப் பெறுவதற்கு அது பயன்படுத்தப்படுவதாக நீங்கள் அறிந்திருந்தால், தயவுசெய்து குற்றத்தடுப்பு (Crime Stoppers) 1800 333 000 என்ற எண்ணுக்கோ அல்லது ***www.crimestoppers.com.au*** என்ற இணையத்துக்கோ தொடர்பு கொள்ளவும்.

***மேலதிகக் குற்றத் தடுப்புத் தகவல்களுக்கு www.police.nsw.gov.au என்ற எங்களது இணையதளத்துக்குச் செல்லவும்.***

NSW Police Force

NSW GOVERNMENT | Justice

MailSafe
A failsafe against mail theft.

**Triple Zero (000)**
நெருக்கடியான அல்லது உயிருக்கு ஆபத்தான நிலைமையில்.

**Police Assistance Line (131 444)**
நெருக்கடியில்லாத நேரங்களில்.

**Crime Stoppers (1800 333 000)**
குற்றம் பற்றிய தகவல்களை வழங்க.
இதில் பெயர் வெளியிடப்படமாட்டாது.